
Koviloor Digital Library

உ
சிவமயம்



சக்தி வேலன் பாமாலை





ACC NO :- 36042

பதிமூன்றாம் ஆண்டு தைப்பூச வெளியீடு - 2022

ஸ்ரீமுருகன் நற்பணி மன்றம் - காரைக்குடி

Koviloor Digital Library

உ

சிவமயம்





காலைத் தொழுதாலும் கந்தாஉன் கையிருக்கும்
வேலைத் தொழுதாலும் வேல்கழுவிக் கால்வழியும்
பாலைத் தொழுதாலும் பாய்ந்து வரும் உன்மயிலின்
வாலைத் தொழுதாலும் வாழ்வு

"பழனி யாத்திரை பக்தர்கள் அனைவரும்
அழகுமுருகனின் அருளால் உயர்கவே!"

தரம்! சுவை!! நிறைவு!!!

அண்ணாமலை கேட்டரிங்

தமிழகமெங்கும் செட்டிநாடு சைவ/அசைவ உணவு வகைகள்
தரமான முறையில் செய்து தரும் நிறுவனம்

அரசி முத்துக்குமார்

செல்: 73737 33192, 9677026431, 98945 92516
எண்: 9, சுப்பிரமணியபுரம் 7வது வீதி, வடக்கு விஸ்தரிப்பு.
காரைக்குடி-2.










Koviloor Digital Library

3-6

உ
சிவமயம்

சக்திவேலன் பாமாலை

2022





இடம் : சிவானந்த மஹால்

வெளியீடு :
ஸ்ரீ முருகன் நற்பணி மன்றம் – காரைக்குடி

பதிமூன்றாம் ஆண்டு வெளியீடு

Koviloor Digital Library



உலகு புகழ் கற்பகத்தான் உயர்வான திருக்கோயில்
வலம் வந்து வழிபடுவோர் வாழ்க்கையிலே உயர்வடைவர்
நலம் தருவார் வளம் தருவார் நமைக்காக்கும் பெருந்தெய்வம்
பலகோடி மக்களுக்கும் பார்வையினால் அருள்புரிவார்

அரசி முத்துக்குமார்

Koviloor Digital Library 3-6

உ
சிவமயம்
ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

01-01-2022

அருளாடியார் பழநி பாதயாத்திரை குருநாதர்
கு.ப.சு.ப.சு.சுப.பழ. பழநியப்ப செட்டியார்
கண்டனூர்.
முருகன் இல்லம், 394. செக்காலை ரோடு,
பாண்டியன் தியேட்டர் அருகில்,
காரைக்குடி-630 002

ஆசியுரை

காலில் வலுவேந்தி கருத்தில் உனையேந்தி
ஆளுக்கொரு குறையை அவரவரும் நெஞ்சேந்தி
நடந்து வரும் உன்னடியார் நல்ல வழி கண்டுயர
பழநி மலையானே அருள்புரிய வேண்டுகிறேன்.

சாமி வந்து நீறுதந்து மக்கள் வெள்ளத்தை
சத்தியமாய்க் காத்தருளும் பழநி ஆண்டவா
எய்ப்பின்றி எல்லோரும் உன்னருள் பெறவே
எங்கும் எழுந்தருளிக் காத்தருள்வாய் பழநி ஆண்டவா!

பாதயாத்திரை மேற்கொள்வது தவம் செய்வதற்கு ஒப்பானது. பண்டைக்காலங்களிலே அமர்ந்த நிலையிலோ, நின்ற நிலையிலோ தவம் செய்து இறையருளைப் பெற்றார்கள். ஆனால் நடந்து தவம் செய்து இறையருளைப் பெறமுடியும் என்று உணர்த்தியது பழநியாத்திரை ஆகும். அத்தகைய பெருமைக்கும் பாரம்பரியத்திற்கும். உரிய பழநி பாதயாத்திரை மந்திரமாவது நீறு என்ற திருநீற்றின் பெருமையினை பறைசாற்றி நம்முடைய பழவினைகளை வேரறுக்க கிடைத்த ஒரு ஆன்மீக மருந்தாகும். எம்பெருமான் எல்லாம் வல்ல அருள்மிகு பழநியாண்டவருடைய திருவருளினாலே கடந்த 400 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் இந்தப் புனிதயாத்திரையின் பொருட்டு பாதயாத்திரை பக்தர்களுக்கு உறுதுணையாக காரைக்குடி. ஸ்ரீ முருகன் நற்பணி மன்றத்தார் முருகன் பாமாலை என்ற ஆன்மீகப் பாடல்கள் அடங்கிய தொகுப்பை வெளியிடுவது குறித்து மிக்க மகிழ்ச்சி. என்னுடைய வாழ்த்துக்களும், ஆசீர்வாதங்களும்.

வேணும்

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

Koviloor Digital Library

முன்னுரை

உங்கள் கைகளில் தவழும் சக்திவேலன் பாமாலை என்ற ஆன்மீக நூல் - பழநி வழி நடைப்பாடல்கள் மற்றும் பக்திப்பாடல்கள், அடங்கிய தொகுப்பாகும். இந்நாலினை பழநிக்கு காவடி எடுத்துச் செல்லும் பக்தர்களுக்கும், பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கும் மற்றும் ஆன்மீக அன்பர்களுக்கும் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம். மேலும் இந்நூல் முருகன் திருவருள் பரிபூரணமாக நிரம்பிய பெரியோர்களால் வெளியிடப்படுவதும், வாழ்த்துரை வழங்கப்பட்டிருப்பதும் ஸ்ரீ முருகன் நற்பணி மன்றத்தின் நல்ல வளர்ச்சியினையே எடுத்துக் காட்டுகிறது.

நம் முருகன் பூஜைக்கும். ஆன்மீக நூல்கள் வெளியீட்டு விழாவிற்கும். வருகை தந்து விருது பெற்ற பல்துறை சாதனையாளர்களுக்கும், வருகை புரிந்து சிறப்பித்த அனைத்துப் பெரியோர்களுக்கும், அனைத்து நிகழ்ச்சிகளும் சிறக்க உதவிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி!.

அன்புடன்

அரசி முத்துக்குமார்

&

ஸ்ரீ முருகன் நற்பணி மன்றத்தார்

காரைக்குடி

இடம் : சிவானந்த மஹால்

தேதி : 04-01-2022

Koviloor Digital Library

வாழ்த்துரை

கந்தவேலன் திருவடிகள் நெஞ்சில் தேக்கிக்
காவடியோ பாற்குடமோ தூக்கி
வந்தவினை தீர்ந்துய்யப் பழநி வேலன்
மலைநோக்கி நடைத்தவம்செய் அடியார்கூட்டம்

கெந்துநடை சரியாக்கும் மருந்து மூன்றாம்
கெஞ்சுமனம் வாயடக்கும் விரதம் ஒன்று
கந்தவேளை அருகழைக்கும் பாட் டிரண்டு
கருணைகமழ் அருளாடி நீறு மூன்றே!

செந்தமிழால் வைதாலும் வாழ வைக்கும்
செவ்வேளை வரவழைக்கும் பாடல் பாடும்
முந்துகலை முருகனருள் வரமாய்ப் பெற்ற
முதுபுலவர் பாடல்களின் தொகுப்பு நூலாம்

நிமிர்ந்தநடை கால்கள் பெற நீறு தந்தார்
நெடும்பணிசெய் நடைப்பயண அடியார் கூட்டம்
தமிழறிந்து பிழையின்றி அச்சடித் தார்
தழைத்தோங்க வாழ்த்தரசி மாலை ஈதே!

மகாகவி டாக்டர்
அர. சிங்கார வடிவேலன் (எ) அரசி
கண்டனூர்.

Koviloor Digital Library

பழநியாண்டவர் பாமாலை

மகாகவி அரசி எழுதிய வரலாறு

அன்புடையீர், வணக்கம்.

பழநி வழிநடைபாதயாத்திரை செட்டிநாட்டு பகுதியில் இருந்து கடந்த 400 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிறது.

குன்றக்குடியில் இருந்து இருத்தினவேல் துணையுடன் கண்டனூர் அருனாடியார் தலைமையில் சிறப்பாக நடந்து வருகிறது.

குன்றக்குடி நகர காவடி பண்டாரம் எடுக்கவும், தேவகோட்டை முதலியார் காவடி ஒன்றும் பழநிக்கு தைப்பூசத்திற்கு சென்று வந்தது.

அதன் பிறகு நகரத்தார் முதன் முதலாக தேவகோட்டை I.N.A. சொக்கலிங்கம் செட்டியார் தான் முதன் முதலில் காவடி எடுத்தார்கள். அதன் பின் ஒவ்வொரு ஆண்டும் காவடிகள் இன்று நூற்றுக்கு மேலாக காவடிகள் பெருகி, பழநிக்கு தைப்பூசத்திற்கு இரத்தினவேல் துணையுடனும் கண்டனூர் அருளாடியார் தலைமையில் நடந்து வருகிறது.

அப்பொழுது வழிதடை பயணத்தின்போது பழநி ஆண்டவர் பாடல்களை பாடி செல்வார்கள் (பழம் பெரும் பாடல்களை) இந்த நடைபயணத்தில் புதிய பாடல்களை முதன் முதலில் நாங்கள் 1973ம் கொண்டு வந்தோம்.

புதிய பாடல் பிறந்த கதை

1973ம் ஆண்டு நலம்பர் மாதம் தேவகோட்டையில் உயர்திரு. பழ. கைலாசம் செட்டியார் அறுபதாம் ஆண்டு மணி விழாவின் போது ஒரு சிறிய கையடக்க புத்தகம் வெளியிட்டார்கள்.

அந்த பாடல்களை எடுத்துக் கொண்டு கொல்லங்குடியார் வீதியில் வாடகை வீட்டில் இருந்த பேராசிரியர் அர.சிங்காரவடிவேலன் அண்ணன் அவர்களைப் பார்த்து காண்பித்து இதுபோன்ற பாடல்கள் வேண்டும்

Koviloor Digital Library

என்று நானும் நண்பர் SP. குமரப்பனும் கேட்டோம். அதற்கு அண்ணன் அவர்கள், பட்டிமன்றம், மேடைகளில் பேசி இருக்கிறேன் இதுபோன்ற பாடல்கள் எல்லாம் எழுதியது இல்லை என்று சொன்ளர்கள்.

அதற்கு நாங்கள் தங்களுக்கு முருகன் திருவருளால் பாடல்கள் தானாக வரும், எழுதித் தாருங்கள் என்று சொன்னோம். அதற்கு அவர்கள் பிறகு பார்க்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். நானும் SP. குமரப்பனும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம்,

அதன் விளைவு 1973ம் வருடம் டிசம்பர் மாதம் ஒரு நாள் எங்களை அழைத்து பழநி வழிநடைப் பதிகம் என்ற தலைப்பில் "தமிழாலே அழைத்தவுடன் தாவும் பாலா, தங்கநிகர் செங்கதிர் போல் மின்னும் வேலா" என்ற பதிகத்தை எழுதித் தந்தார்கள். அது 10 பாடல்கள் கொண்ட தொகுப்பு அதில் கடைசி 10வது பாடல்

சிங்கார வடிவேலன் கண்டனூராம்
சிற்றூரின் தமிழ்க் கவிஞன்; தேவகோட்டைத்

தெங்கான சேவுகனார் கல்விக் கோயிற்
செந்தமிழின் பேராசான்; தம்பிமாரின்

மங்காத அன்பாலே பழநிவேலன்
மணிப்பதிகம் பாடுகிறேன். உங்கள் அன்பின்

பங்காளி ஆகின்றேன். படிப்போர் கேட்போர்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க நன்றே – *அரசி*

அவர்கள் பிறந்த ஊரையும், வாழ்ந்த ஊரையும் பணிபுரிந்த கல்லூரியையும் குறிப்பிட்டும், எங்களையும் தம்பிகளாக பாவித்து பாடல்கள் அமைத்துத் தந்தார்கள்.

இந்த பாடல் தொகுப்பை வெளியிட சிறுவர்களாகிய எங்களிடத்தில் பொருளாதார வசதி இல்லை. அந்த காலகட்டத்தில் எங்களுக்கு உதவி புரிந்த பெருந்தகை தேவகோட்டை சரவணா சைக்கிள் மார்ட் அதிபர் திரு சரவணா சுப்பு அண்ணன் பலபேரிடம் பேசி, விளம்பரங்கள் வாங்கிக் கொடுத்து உதவினார்கள். சுமார் 1000 பிரதிகள் 1973ம் ஆண்டு தைப்பூசத்திற்கு வெளியிட்டோம். அந்த புதிய பாடல்களை கண்டனூர் அருளாடியார் அய்யா தலைமையில் தேவகோட்டை நகரப் பள்ளிக்

Koviloor Digital Library

கூடத்தில் நண்டர்கள் நால்வராகிய நாங்கள் நடத்தும் பஜனையில், கண்டனூர் மாயாண்டிச் செட்டியார் என்ற திரு. KT. ரங்கநாதன் செட்டியார் அவர்களும், தேவகோட்டை திரு மாணிக்க அய்யா அவர்களும் பாடி வெளியிடப்பட்டது.

அந்த பாடல்களை பக்தர்கள் வழிநடையில் அனைவரும் பாடி, நன்கு பிரபலம் அடைந்தது. அதன்பிறகு அடுத்த ஆண்டு 1974ம் ஆண்டு சிங்கார மாலை என்ற வருகை பதிகம் ஒன்றையும், விண்ணாளும் தென்பழநி வேலவனே என்ற அற்புதமானபொருள் நிறைந்த என்றும் மறக்க முடியாத பாடல்களை எழுதி தந்தார்கள்.

அதன் பின் அண்ணன் அவர்கள் நிறைய பாடல்களை மடை திறந்த வெள்ளம் போல் எழுதிக் குவித்தார்கள். முதன்முதலாக அருட்கவி கு.செ. இராமசாமி அய்யா அவர்கள் எழுதிய அம்மன் பாடல்கள் – ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் என்ற உமையவள் பாமாலையும், அண்ணன் அவர்கள் வெளியிட்ட முத்துக்குவியல் என்ற புத்தகத்தில் முதன் முதலில் வெளியிட்டார்கள். அந்தப் பாடல்களும் மிக பிரபலம் அடைந்தது. அரசி அவர்கள் மற்ற கவிஞர்களையும் ஊக்குவித்தார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அரசி அவர்கள் எப்பொழுதும் எங்களை அவர்கள் தம்பிகளாகப் பாவித்து, தம்பி என்றே அழைப்பார்கள். அவர்கள் இன்று இல்லை என்றலும் – அவர்கள் எழுதிய பாடல்கள் அனைத்தும் அவர்கள் பெயர் சொல்லிக் கொண்டே இருக்கும். அவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டை, அவர்கள் புதல்வன் அரசி. முத்துக்குமார் தொடருகிறார். வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ்த் தொண்டு! வளர்க அவர்கள் புகழ்!!

25-12-2021
சென்னை - 21

என்றும் நன்றி மறவாத அன்புத் தம்பி
மைசூர் காவன்னா. சுவாமிநாதன்
தேவகோட்டை

Koviloor Digital Library



விநாயகர் துதிகள்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

திருமூலர்

வெற்றி முகத்து வேலவனைத்
தொழப் புத்தி மிகுந்து வரும்
வேழ முகத்து விநாயகனைத் தொழப்
புத்தி மிகுந்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி யோடுந் தொடர்ந்த வினைகளே

அப்ப முப்பழ மமுதுசெய் தருளியே
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே

கபிலர்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

ஔவையார்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்(து) உனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

ஔவையார்

காலைத் தொழுதாலும் கந்தா உன் கையிருக்கும்
வேலைத் தொழுதாலும் வேல்கழுவிக் கால்வழியும்
பாலைத் தொழுதாலும் பாய்ந்து வரும் உன்மயிலின்
வாலைத் தொழுதாலும் வாழ்வு.

– மகாகவி டாக்டர் அரசி

Koviloor Digital Library

காவிரி போல் வளர்வோம்

அள்ளிக் கொடுப்பதில் வல்லமை பெற்றவன்
அப்பன் பழனியப்பன் - தினம்
அச்சம் தவிர்ப்பவன் ஆறுதல் சொல்பவன்
அப்பன் பழனியப்பன்

கள்ளம் கபடம் இலாதவர் தம்மிடம்
காவலில் நின்றிருப்பான் - அங்கு
கால்நடை யாய்வரும் மானிட ஜாதியைக்
கண்டுகளித்தி ருப்பான்.

துள்ளிவரும் வடிவேலுக்கு மேலொரு
ஜோதிப் பிழம்புமுண்டோ? - அந்த
சுப்பையன் போலோரு அற்புத தெய்வத்தை
சொல்ல மொழியுமுண்டோ?
வெள்ளிமுகம் பனிரெண்டையும் கண்டபின்
வேறொரு சொர்க்கமுண்டோ - ஆண்டி
வேஷத்திலாயினும் வீரத்திலாயினும்
வேலனை வெல்வதுண்டோ?

சித்தர் வணங்கிய சேவற்கொடியோனைச்
சேர்ந்து வணங்கிடுவோம் - அந்த
சிக்கலிலாயினும் செந்திலிலாயினும்
சென்று பணிந்து நிற்போம்!
பக்தருக்கென்று திறந்திருக்கும் தென் பழநியைக்
கண்டுகொள்வோம் - அங்கு
பாலாபிஷேகமும் தேனாபிஷேகமும்
செய்து பணிந்தி நிற்போம்!

செட்டி முருகன் எனும் பெயர்பெற்றவன்
தெண்டாயுத மல்லவோ - அந்த
சித்திர வள்ளியுன் சாடையில் மற்றொரு
செட்டி மகளல்லவோ!
கொட்டிக் கொடுப்பவன் கோவிலைப் பார்த்திட
கோஷ மிட்டோடிடுவோம் - முள்ளும்
குத்தட்டுமே கல்லும் தட்டட்டுமே வலி
கொஞ்சமும் கண்டுகொள்ளோம்!

Koviloor Digital Library

ஆறும் அறுபதும் ஆணி இருபதும்
ஆடி நடந்து செல்வோம் – சில
ஆனந்தப் பாடல்கள் வேலனைப் பாடட்டும்
அன்புடன் ஊர்ந்து செல்வோம்

ஊறுகள் நேரட்டும் உமையவள் மைந்தனை
உச்சத்தில் வைத்திருப்போம் – கையில்
உள்ளதை அன்னவன் கோவிலுக்கே தந்து
மிச்சத்தில் வாழ்ந்திருப்போம்.

வேலன் குமரன் முருகன் திருச்செந்தில்
வேட்டுவன் கந்தனுக்கு – இரு
கால்கள் நடக்கின்ற நடையினில் தானுயர்
கனிவு நிறைந்திருக்கு
காலம் வழிவிடும் கச்சிதமாய்ச் சென்று
கால்களிலே விழுவோம் – அவன்
கால்களிலே விழக் கால்கள் நடக்கட்டும்
காவிரிபோல் வளர்வோம்.

– கவியரசர் கண்ணதாசன்

விண்ணாளும் தென்பழநி

(பாடிய ஆண்டு : 1977)

(ஒவ்வொரு வரிக்கும் அரோகரா சொல்ல வேண்டும்)

விண்ணாளும் தென்பழநி வேலவனே! உன்னடியைப்
பண்ணாரும் ஒருகோடிப் பாட்டாலே தண்டனிட்டேன்
சீராரும் வேலவனே! தென்பழநி ஆண்டவனே!
வாரா திருப்பதுவோ வளர்கருணைத் திறமிதுவோ?
வேளைக் கிறங்கிவரும் வேலவனே! தேடிவரும்
ஏழைக் கிரங்கிமுகம் எப்போது காட்டுவதோ?

ஆள்பார்த்தே உதவிசெயும் அநியாயச் சீமையிலே
நாள்பார்த்து வருவாயோ? நடைபார்த்தும் இரங்காயோ?
வேல்பார்த்துத் தண்டனிட வினைமாய்த்து நடந்துவரும்
கால்பார்த்து மனமிரங்கிக் கண்பார்க்க வந்துவிடு

Koviloor Digital Library

வெயில் நிலவாக வீதி மலராக
மயில்பார்க்க வருவோரை மனம்பார்க்க வேண்டுமய்யா
காலை இரும்பாக்கிக் கருத்தை மலராக்கி
வேலை வணங்குகிறோம் வேலவனே! வந்துவிடு
வள்ளி மயிலுன்னை வசமாக்கி விட்டாளோ?
புள்ளி மயிலேறிப் புறப்படவும் மனமிலையோ? 16

மூத்தவளாம் தெய்வானை முன்தானை மந்திரமோ?
காத்து வளர்க்கின்ற கடமை உனக்கிலையோ?
நாத்தழும்பப் நல்லதமிழ்க் கேட்பதற்கே
காத்திருக்க வைப்பாயோ? கருணை பழுக்கலியோ? 20

கையில் மணமலரும் கண்ணில் வடிநீரும்
பொய்யென்று நினைத்தாயோ? புகழாசைப் பட்டாயோ?
தோளிருக்கும் காலடியும் துவண்டிருக்கும் காலடியும்
மேலிருக்கும் உன்னிரண்டு விழிகளுக்குத் தெரியலையோ?
பாலிருக்கும் நெஞ்சுடையாய்! பழமிருக்கும் கனிவுடையாய்
காலிருக்கும் வேதனையைக் கண்டுமனம் இரங்கலையோ? 26

சேலிருக்கும் விழியாரைச் சேர்ந்திருக்கும் வேலவனே!
வேலிருக்கும் கையாலே வினைதீர்க்கத் தாமதமேன்?
வேண்டியதும் மயிலேறி விரைந்தோடி வந்துவிடின்
மீண்டுவரார் என்றே மெதுவாய் வருவாயோ? 30

அடையாமல் விடமாட்டார் அடியார் என அறிந்தும்
கிடையாச் சரக்காய்க் கெஞ்ச விடலாமா?
வரிசை வரிசையென வந்தடியார் முந்துகையில்
அரிசிக்கு உழுவாயோ? அருளுக்கும் இழுக்கிலையோ?
நடந்துவரும் உன்னடியார் நல்லன்பு புரியலையோ?
தடந்தவறி விட்டாலும் தமிழ்தவற விடலாமா? 36

ஆசைத் துடிப்புடையான் அருட்கவிஞன் அருணகிரி
ஓசைக்குத் துடித்தனை உலகத்தார் மறப்பாரோ?
ஊமைக் குருபரனை உள்ளுருகிப் பாடவிட்ட
சீமைச் சமர்த்தைச் செகத்தார் மறப்பாரோ? 40

Koviloor Digital Library

பகழிக் கூத்தர் பைந்தமிழைக் கேட்டுளுகி
வயிற்றுவலி நீக்கியதை வையம் மறந்திடுமா!
உன்னை வசமாக்க உன்னடியார் செய்ததெல்லாம்
என்ன வழியென்றே எங்களுக்குத் தெதியாதா?
ஆடிக் கறப்பதனை ஆடிக் கறப்பவர்கள்
பாடிக் கறக்காமல் பாலனுனை விடுவோமா? 46

கரையாத கற்களையும் கரைக்கவழி தெரிந்தவர்கள்
குறையாத உன்னருளைக் கொண்டுவர மாட்டோமா?
என்னபிழை செய்தாலும் இசைத்தமிழால் உனை அழைத்தால்
சொன்னபடி கேட்கும் சூட்சுமங்கள் அறியோமா? 50

பெண்பாவம் செய்தாலும் பின்னர் மனந்திருந்தி
வெண்பாவால் வழிபட்டால் விரைந்துவரும் வேலவனே!
ஏசும் நிலையாரும் இதயத்தால் நைந்துருகி
ஆசிரியப் பாவால் அழைத்தவுடன் வருபவனே!
நஞ்சான கொடியவரும் நைந்துருகிப் பாடிவரும்
வஞ்சிப் பாவுக்கு வசமாகி நிற்பவனே! 56

சலிப்பின்றித் தீமையினைச் சமயம்போல் செய்பவரும்
கலிப்பாவைக் கொண்டு கைகூப்ப அருள்பவனே!
காலில் வலுவேந்திக் கருத்தில் உனையேந்தி
ஆளுக் கொருகுறையை அவரவரும் நெஞ்சேந்தி 60

நடந்துவரும் உன்னடியார் நல்லவழி கண்டுயரக்
கடம்ப மரத்தானே! கடுகிவர வேண்டுகிறேன்
வையா புரிநாடா! மயிலேறும் வேலவனே!
ஐயா குமரா! அருள்பொழிய வந்துவிடு
தண்டை மூழங்கத் தாவிவரும் வேலவனே!
அண்டையிலே வந்திடுக ஆதரவைத் தந்திடுக! 66

சிங்கார வடிவேலன் செந்தமிழால் கெஞ்சுகிறோம்
இங்கேநீ வந்துவிடு இப்போதே தோன்றிவிடு
குயில்போலப் பாடும் கொஞ்சுதமிழ்க் கேட்டுருகி
மயிலேறி வந்திடுவாய் மலைப்பழநி வேலவனே! 70

Koviloor Digital Library

சிங்கார மாலை

(ஒவ்வொரு வரிக்கும் அரோகரா சொல்ல வேண்டும்)

ஆனை முகத்தானே! ஐங்கரனே! உன்னிளையோன்
மானை நிகர்விழியார் மணவாளன் வடிவேலன்
வானை நிகர்கருணை வழங்கும் திறம்பாட
மோனைத் தமிழாகி முன்னவனே காப்பாவாய்!

வானோங்கு தென்பழநி வளர்ந்தோங்கும் வேலவனே!
தேனோங்கு செந்தமிழால் தினமோங்கத் தெண்டனிட்டோம்
மானோங்கு மாதருடன் மயிலேறும் வானவனே!
வானோங்கு செங்கதிரே! வருவாய் இதுசமயம்!

கையிற் பழமேந்திக் கருத்தில் உனையேந்தி
மெய்யாக வழிபடுவார் மேலாக்கும் வேலவனே!
வெய்யிலுக்கு விரிநிழலே! வினைநீக்கும் மாமருந்தே
வையா புரிநாடா! வருவாய் இதுசமயம்!

மஞ்சாடும் மலைதோறும் மயிலேறும் வேலவனே!
நெஞ்சாடும் கவலைஎல்லாம் நீதீர்க்க வேண்டுமையா
தஞ்சமென வந்தவரைத் தாயெனவே ஆதரிக்க
வஞ்சியரின் நாயகனே வருவாய் இதுசமயம்!

காளைத் தவிசேறும் கண்ணுதலான் கண்மணியே!
பாளைச் சிரிப்பழகா! பழநிமலை ஆண்டவனே!
ஆளை அளக்காமல் அன்பை அளந்துடனே
வாளை புரள்வயலா! வருவாய் இதுசமயம்!

அப்பா எனக்கூவி அழைப்பதுவும் இப்புவியில்
தப்போ யான்கூறும் தமிழும் கசப்பதுவோ?
ஒப்பாரும் இல்லாத ஓங்கார வேலவனே!
சுப்பையா மயிலேறி தோன்றிடுவாய் இதுசமயம்

முல்லை மலர்போன்ற முத்துச் சிரிப்பழகா!
எல்லை வருவோரின் இடர்தீர்க்கும் வேலவனே!
கல்லான வன்மனமும் கனியாக்கி வைப்பதிலே
வல்லலானே வடிவேலா! வருவாய் இதுசமயம்!

Koviloor Digital Library

தெள்ளு தமிழுக்கும் தினைப்புனத்தில் கிளிபயிலும்
வள்ளி மயிலுக்கும் வசமாகி விட்டவனே!
அள்ளூறிப் பாடிவரும் அடியவரின் மிடிதீர்க்கும்
வள்ளல் மனத்தரசே! வருவாய் இதுசமயம்!

வானேறும் கற்புடைய மாதரசி தெய்வானை
கூனேறும் நெற்றிக்கே குழைந்துருகும் வேலவனே!
தேனூறும் செந்தமிழால் தெண்டனிடும் மெய்யடியார்
வானேற வைப்பவனே வருவாய் இதுசமயம்!

என்ன முருகா! எழுந்துவரத் தாமதமேன்?
சொன்ன தமிழிற் சுவைகுறைவோ சொன்னவனும்
சின்னவனோ? வள்ளி திசைமாற்றி விட்டாளோ?
மன்னவனே குடிகாக்க வருவாய் இதுசமயம்!

பண்ணொழுகும் செந்தமிழாற் பாடிவரும் உன்னடியார்
கண்ணொழுக நிற்பதையும் கண்டுமனம் இரங்கலையோ?
என்ன பிழை நானுடையேன்! எப்படிநான் கூப்பிடுவேன்?
வண்ணமயில் வாகனனே! வருவாய் இதுசமயம்!

ஐயா திருக்குமரா! அடியேன் கதறுவதும்
பொய்யோ நானுரைக்கும் புகழும் இகழாமோ?
செய்யான சிந்தையிலே செழித்தோங்கும் தாமரையே!
வையா புரிக்கரசே! வருவாய் இதுசமயம்!

கந்தா எனக்கதறும் கவிஉனக்குக் கேட்கலையோ?
சந்தையிலே நாய்போலத் தமியேன் அலைவதுவோ?
சிந்தாமணியே! செல்வக் களஞ்சியமே!
வந்தருளத் தாமதமேன் வருவாய் இதுசமயம்!

அஞ்சித் தலைகுனிந்தும் அடிமையை போல்வாய் புதைத்தும்
கெஞ்சி அழைத்தால் கேளாதோ நின்செவிக்கு?
வஞ்சியரின் கண்வலையில் மானாகி விட்டாயோ?
மஞ்சுலவு மலைநாடா! வருவாய் இதுசமயம்!

Koviloor Digital Library

பாடாத பாட்டெல்லாம் பாடி அழைத்தாலும்
ஆடா திருப்பதுவோ? அருளும் வறண்டதுவோ
வாடா மருக்கொழுந்தே! மலைப்பழநி வேலவனே
வாடா என அழைத்தேன் வருவாய் இதுசமயம்

கோவணத்தும் எழில்குலுங்கும் குழந்தை வடிவேலவனே
காவணம்போல் நிழம் கொடுக்கும் கருணைவடி வானவனே
பூவனத்தில் துள்ளிவரும் புள்ளிமயில் வாகனனே
வாய்மணக்கக் கூவுகின்றேன் வருவாய் இதுசமயம்!

தீராநோய் தீர்த்தருளும் தென்பழநி மருத்துவனே!
கூறாமல் குறைதீர்க்கும் குறிப்பறிந்த மன்னவனே!
ஓராறு முகங்காட்டி ஓங்கார உருக்காட்டி
வாரா திருப்பதுவோ? வருவாய் இதுசமயம்!

கல்லாப் பிழைகளையும் கற்றவர்கள் கற்றபடி நில்லாப்
பிழைகளையும் நெஞ்சுருகி உன்பெயரைச்
சொல்லாப் பிழைகளையும் சோதிவடி வானவனே
இல்லாப் பிழையாக்க எழுவாய் இதுசமயம்!

எல்லாத் துறையினிலும் ஏமாற்றும் புனைசுருட்டும்
பொல்லாத சூரனைப்போல் புகுந்துவரும் இந்நாளில்
பொல்லாரும் மனந்திருந்திப் புத்தியிலே தெளிவுபெற
வல்லானே வேலெடுத்து வருவாய் இதுசமயம்!

சொல்லாலே மாலையிட்டுத் துணையடியில் தெண்டனிட்டு
வல்லாரும் மாட்டாரும் வழிநெடுக ஓலமிட்டும்
கல்லாய் இருப்பதுவோ கவலைகளைத் தீர்த்தருள
வல்லாய் திருக்குமரா! வருவாய் இதுசமயம்!

தங்கநிற வேலவனே! தமிழருந்தும் பாலகனே!
சிங்கார வடிவேலன் செந்தமிழைக் கேட்டுவைக்க
இங்குவர வேண்டுமென எல்லோரும் வேண்டுகிறோம்!
மங்கையரின் காதலனே! வருவாய் இதுசமயம்!

– முனைவர் அர. சிங்காரவடிவேலன்

Koviloor Digital Library

துள்ளி விளையாடும் சின்னப்பிள்ளை

கந்தனுக்கும் வேல் வேல் செந்தூர் வேலனுக்கும் வேல்வேல்
கந்தனுக்கும் வேல் வேல் செந்தூர் வேலனுக்கும் வேல்வேல்

துள்ளிவிளையாடும் சின்னப் பிள்ளைமுகம்
மறந்து வெள்ளி விளையாடும் மலேயா சீமை தன்னை அடைய
நாகப்பட்டினத்துக் கடலில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும்
செட்டிகப்பலுக்குத் துணையாம் செந்தில் ஆண்டவனே!

செந்தில் ஆண்டவனே! ஐயா செந்தில் ஆண்டவனே!
வந்தவினை தீர்க்கும் எங்கள் செந்தில்வடிவேலா!
கப்பல் ஏறுகையில் முதலில் கடல் முகம் தெரியும்
கண்களில் நீரோடு நிற்கும் மனைவி முகம் தெரியும்
அன்னைமுகம் தெரியும் அன்புப்பிள்ளை முகம் தெரியும்
அந்த முகங்களிடைச் செந்தூர் கந்தன்முகம்தெரியும்.

பினாங்கு துறைமுகத்தைக் கப்பலும்
பிடித்து விட்டதையா கப்பல் அடியிலே கூட்டம்
கண்டிட வந்திருக்கு தண்ணீர்ப் பூமலையில் நிற்கும்
தண்ணி மலையானே! எங்கள் பெண்டு
பிள்ளைகளைக் காக்கும் பெரிய மலையானே

தண்ணி மலையானே! நெஞ்சின் தாகம் தீர்ப்பானே
கண்களில் நீர்வழிய நாமும் கைகள் குவிப்போமே
தைப்பூச நாளினிலே அவனும் தங்க ரதமேறி
நகரத்தைப் பார்க்கத் தேரில் நகர்ந்து வந்திடுவான்

பார்க்குமிடமெல்லாம் தமிழர் பக்திமுகம் தெரியும்
காவடி ஆடிவரும்சீனர் காலடியும் தெரியும்
கந்தனுக்கு வேல் வேல் செந்தூர் வேலனுக்கு வேல் வேல்
கடலை தாண்டி எடுக்கும் காவடிக்கு வேல் வேல்!

கந்தனுக்கு வேல் வேல்! காவடிக்கு வேல் வேல்!
கந்தனுக்கு வேல் வேல்! காவடிக்கு வேல் வேல்!

– பேராசிரியர். மா. கண்ணப்பன்

Koviloor Digital Library

தையல்நாயகி பாமாலை

எண்கலை வித்தகர், தினத்தந்தி ஜோதிடர்,
கவிஞர் சிவல்புரி சிங்காரம்

எள்ளுப்பூ மூக்கு எழிற்குவளைப் பூக்கண்கள்!
இயல்பான அழகு வடிவம்!
இனியமுகம் தாமரை! இருசெவிகள் செந்தாழை!
இறைவி நிறம் நல்ல பவளம்!
கள்ளிருக்கும் ரோஜாப்பூக் கன்னங்கள்! அல்லியில்
கடைந்ததோர் இரண்டு கால்கள்!
கைகளும் விரல்களும் கனகாம்பரம் மல்லி!
கற்பகப் பூவில் தோள்கள்!
புள்ளிருக்கும் வேளூர் பூவையுன் அங்கமெல்லாம்
பூக்களாய் மலர்ந் திருக்க!
பூவுடல் கொண்டவனை வர்ணித்துப் பாமாலை
பூ மாலை யோடு தந்தேன்!
வல்லவள் உன் அருளாலே வரும்துயரைப் போக்கியொரு
வரம் தந்து காக்கவருவாய்!
வைத்தீஸ்வரன் கோவில் வளர்தையல் நாயகியே
வளம்காண வைக்கும் உமையே! 1

பால்கேட்டு அழுததோர் பிள்ளைக்குச் சீர்காழிப்
படித்துறையில் பால் கொடுத்தாய்!
பச்சைவெற் றிலைதுப்பிக் கவிகாள மேகத்தைப்
பாட்டரசன் ஆக்கி வைத்தாய்!
வேல் கேட்ட பிள்ளைக்கும் செந்தூரில் சமர்செய்ய
விருப்பமுடன் வேல் கொடுத்தாய்!
விளையாடும் ஏழரைச் சனியோடு கிரகங்கள்
விலகிடும் வழி அமைத்தாய்!
நூல் கேட்ட ஞானத்தில் நூறுகவி பாடுமெனை
நோக்கி நீ எது கொடுத்தாய்?
நொடிப்பொழுதில் என் வாழ்வில் படிப்படியாய்த் துயரங்கள்
நுழைவதற்கு ஏன் விடுத்தாய்?
வாழ்வரசி இனி எனது செல்வங்கள் வரும்காலம் செல்வங்கள்
வரும் காலம் ஆக்க வருவாய்!
வைத்தீஸ்வரன்கோவில் வளர்தையல் நாயகியே! 2
வளம்காண வைக்கும் உமையே!

Koviloor Digital Library

தா என்று கேட்டவுடன் கொடுப்பதனால் தானுன்னைத்
    தாய் என்று சொல்லிவைத்தார்
தலைமகனுன் சந்நிதியில் கலைமகளின் அருளாலே
    தமிழ் பாடி வரங்கள் பெற்றார்
சேய்ஒன்று எதிரினிலே கதறுவது கேட்காமல்
    செவிமூடி நிற்க லாமோ?
சிறுபிழைகள் இருந்தாலும் மன்னித்து அருள்காட்டும்
    தேவியவள் நீயல் லவோ?
ஆயகலை அத்தனையும் அறிந்தவனை நோய்நொடிகள்
    அணுகவிடல் முறை யாகுமோ?
அரியதொரு செல்வத்தை உரியமகன் ஏற்காமல்
    அனு தினமும் வாடலாமோ?
வாயுவென வேகமாய் வந்தெனது துயர்தீர்த்து
    மகிழ்ச்சியினைக் கொடுக்க வருவாய்
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே
    வளம்காண வைக்கும் உமையே! 3

தங்கநிகர் குணத்தோடு தைரியமும் தருகின்ற
    தமிழ்ச் செல்வி போற்றி போற்றி
தரணியில் புகழ்காண வரமளிக்கும் சுந்தரியாம்
    தாமரைப்பூ மாது போற்றி
மங்கையர்க்கு மாலைகளும் மன்னவர்க்கு வேலைகளும்
    மகிழ்ந்தளிக்கும் அரசி போற்றி
மாதரசி உண்ணா முலைஅழகு சிவகாமி
    மங்கை மீனாட்சி போற்றி
பொங்கிவரும் துயரத்தைப் பொடியாக்க ஓடி வரும் அன்ன
    பூரணி கல்யாணி போற்றி
யோகமுடன் வாழ்வுதரும் பூங்கொடியாம் விசாலாட்சி
    புனித உமாதேவி போற்றி
மங்களங்கள் அத்தனையும் எங்களது வீடுவரை
    மாதரசி கூட்டி வருவாய்
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே
    வளம்காண வைக்கும் உமையே! 4

Koviloor Digital Library

மலைபோன்ற செல்வத்தைக் குவித்துவைத் திருந்துநான்
மற்றவர்க்கு உதவ வேண்டும்.
மழலையின் குணத்தோடு முதுமையிலும் இளமையாய்
மகிழ்வோடு வாழ வேண்டும்
கலைதவழும் மேடையெலாம் பூமாலை அணிந்துநான்
கௌரவம் காண வேண்டும்
கவிபாடும் எனதுகுரல் கேட்டவுடன் தெய்வமெல்லாம்
காட்சி தந்து அருள வேண்டும்
நிலையான புகழ்தந்து உற்றாரும் மற்றாரும்
நேசிக்கும் உறவு வேண்டும்
நீஎனது துணையாகி நான்செல்லும் பாதைக்கு
நேர்வழிகள் காட்ட வேண்டும்.
வளையாடும் கரத்தழகி பகைவென்று எந்நாளும்
மறுக்காமல் காக்க வருவாய்
வைத்தீஸ்வரன் கோவில் வளர் தையல்நாயகியே
வளம்காண வைக்கும் உமையே! 5

புல்லாகிப் பூண்டாகிப் புழுவாகி இருந்தாலோ
புலம்பியே தீர வேண்டும்
பொன்னாக அணிகின்ற மனிதனாய்ப் பிறந்தநான்
புதுயுகம் காண வேண்டும்
கல்லாகி நிற்கின்ற தெய்வம்நீ இல்லையெனக்
காட்டிட விரைந்து வருக
கனதனம் நீதந்து காசினியில் புகழ்தந்து
காவலாய் நின்று அருள்க
முள்ளாக மலராக மோதிடும் வாழ்க்கையில்
முற்றும் நான் நம்பி வந்தே
மோதகப் பிரியனின் தாயான உன்னிடம்
முறையீடு செய்யுகின்றேன்
பல்லக்குப் பரிவாரம் பார்த்திடும் ராஜாங்கப்
பவனியை எனக்கு அருள்க
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே
வளம்காண வைக்கும் உமையே! 6

Koviloor Digital Library

சிறுவயதில் உன்பெருமை தெரிந்திருந்தாலுன்னைச்
சேவித்து மகிழ்ந்திருப்பேன்!
தெரியாமல் செய்தபிழை அத்தனையும் மன்னிக்கத்
தேடிவந் தழுதிருப்பேன்!
புரியாமல் எடுத்தயிப் பிறவிதனில் மங்கையரின்
போகத்தை அளந்திருந்தேன்!
பொன்னோடும் பெண்ணோடும் வருமின்பம் போதுமெனப்
புரியாமல் வாழ்ந்திருந்தேன்
திருநாளில் உன்பெருமை தெரிந்ததும் தொடர்ந்துநான்
செவ்வாயில் விரதம் வைத்தேன்
தித்திக்கும் அருள் தன்னைச் சித்திக்க வரம் வேண்டி
சிங்காரப் பாட்டிசைத்தேன்
பருவத்தில் நான்செய்த பாவத்தை மன்னித்துப்
பாவைநீ காக்க வருவாய்
வைத்தீஸ்வரன் கோவில் வளர்தையல் நாயகியே
வளம்காண வைக்கும் உமையே!

திருக்கழுக் குன்றத்தில் கழுகுக்கும் மதியத்தில்
தினந்தோறும் சோறு உண்டு
திருநாளாம் பொங்கலில் நந்தியெனும் காளைக்கும்
தித்திக்கும் பொங்கல் உண்டு
வருஷத்தில் ஒருநாளில் வடையோடு
அன்னத்தை வைரவரும் காண்பதுண்டு
வளர்கின்ற புற்றுக்குள் ஒளிகின்ற பாம்புக்கும்
வார்க்கின்ற பாலுமுண்டு
அர்ச்சித்து வழிபட்டு அன்னையே உனையென்னும்
அடியேனுக் கென்ன உண்டு?
அன்றுதினம் அளந்தபடி என்றைக்கும் நடந்திடவே
அருள்புரிய வேண்டும் அம்மா
மரம்வைத்த நீதானே தண்ணீரும் விடவேண்டும்
மறந்திடல் முறையாகுமா?
வைத்தீஸ்வரன் கோவில் வளர்தையல் நாயகியே
வளம்காண வைக்கும் உமையே!

Koviloor Digital Library

கழுதையெனும் பிறவியை எடுத்தாலோ நிச்சயம்
கழுத்திலே பொதியிருக்கும்
காளைமாடாகவே பிறந்திடின் நிச்சயம்
கழனியில் கால் இருக்கும்
பழுதான பிறவியாம் நாயாகப் பிறந்தாலோ
பகலிரவு விழிக்க வேண்டும்
பறவையாய்ப் பிறந்தாலும் மரங்களின் உச்சியில்
பதியங்கள் போட வேண்டும்
அழுதாலும் தொழுதாலும் அன்னையே உனையன்றி
யாரெனக் குதவுவார்கள்?
ஆறறிவு கொண்டதோர் மனிதனாய் என்னைநீ
அகிலத்தில் படைத்த பின்னால்
வழிகாட்ட மறப்பதும் நியாயமா? என்விழியில்
வழிந்து நீர் ஓடலாமா?
வைத்தீஸ்வரன் கோவில் வளர்தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே!

எவருக்கு எதுவேண்டும் என்பதை அறிந்த நீ
ஏறிட்டுப் பார்க்க வில்லை
இருகரம் கூப்பியுன் சந்நிதியில் நிற்கும்நான்
எதுகேட்டும் மாறவில்லை
சிவல்புரியில் வாழ்கின்ற சிங்காரம் தந்ததோர்
செந்தமிழ்க் கவிதை மூலம்
சீர்கொண்ட பதிகங்கள் பத்தையும் கேட்டுநீ
சிரமத்தை அகற்ற வேண்டும்
கவலைக்கு மருந்தாகும் கடவுளே உனைநம்பி
காலங்கள் போக்கி விட்டேன்
காப்பாற்ற வேண்டியது உன்பொறுப் பல்லாது
காசினியில் யார் பொறுப்பு?
மகன் கேட்டுத் தாய்எதுவும் மறுப்பதில் முறையில்லை
மனமிரங்கி வந்து அருள்க
வைத்தீஸ்வரன் கோவில் வளர்தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே

Koviloor Digital Library

ஸ்ரீ பழனி முருகன் துதி

பழனிமலைக்கு நான்வராமல் இருக்கமுடியுமா – உன் பால்வடியும்
திருமுகத்தை மறக்க முடியுமா

ஆண்டுதோறும் ஆண்டுதோறும் பழனிவருகிறேன் – என்
ஆண்டவனே உனதருளை வேண்டி வருகிறேன்
தெய்வயானை வள்ளியுடன் நீ வருவாயா – உன்னைத்
தேடிவரும் எனக்கு உந்தன் அருள் தருவாயா

காவடியைக் கண்டவுன் பக்தி பெருகுது – என்
கால்வலியும் மேல்வலியும் பறந்து செல்லுது
கட்டிவரும் காவடியில் வீற்றிருப்பவனே – அதை
சுமந்துவரும் தோள்களுக்குத் துணையிருப்பவனே

வெற்றியுடன் எனது வாழ்வு நடைபெறவேணும் – நான்
வேண்டுவரம் தந்து என்னைக் காத்திடவேணும்
அன்னதான மடத்தினிலே கோவில் கொண்டவனே – அங்கே
ஆறுகால் சவுக்கையிலே ஆடி நிற்பவனே

அருளாடி வடிவினிலே நேரில் வந்திடுவாய் –உன்
அடியவர்க்கு பொன் பொருளை அள்ளித் தந்திடுவாய்
தங்கரதம் ஏறி இங்கே நீ வருவாயா – பெற்ற
தாயைப்போல எனக்கு என்றும் துணையிருப்பாயா

– கவிஞர், அருளிசைமணி L. *சோமு, பெங்களூர்*



கந்தர் அநுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

Koviloor Digital Library



கந்தவேளை வணங்கு

கந்தவேளை வணங்கு
நம் கவலையெல்லாம் போக்க
நாளும் பொழுதும் தீபம் ஏற்றி
சுந்தவேளை வணங்கு
நன்மையாவும் வீடுசேரும்
பக்தியை நீ விரும்பு
பிறப்பு என்பது ஒருமுறை அதில்
வாழ்வு என்பதும் ஒருமுறை

இருக்கும் வரையில் முருகன் நினைவில்
வாழ்வதில் நிம்மதி உண்டாகும்.

உண்மை அன்பு கொண்ட நெஞ்சில்
வாழுகின்ற தெய்வம்
உள்ளம் உருகி அழுபவர் தமக்கு
துயரம் தீர்க்கும் தெய்வம்
கருணை பொங்கும் ஒரு முகம்
அது கந்தன் முருகன் திருமுகம்

இருக்கும் வரையில் முருகன் நினைவில்
வாழ்வதில் நிம்மதி உண்டாகும்.

பாதம்நோக பயணம் போக
பழநியப்பன் வருவான்
நம் விதியை மாற்றி
வினைகள் அகற்றி
புதிய வாழ்வு தருவான்

ஆறெழுத்து மந்திரம்
அதைச் சொன்னால் சுகம்தரும்

இருக்கும் வரையில் முருகன் நினைவில்
வாழ்வதில் நிம்மதி உண்டாகும்.

Koviloor Digital Library

அருள்தரு ஸ்ரீலஸ்ரீ குட்டையன் செட்டியார் அருள்வெட்டல்

குட்டையனார் அருள்வெட்டல்

மங்கலத்து விநாயகனே! மண்ணுலகின் முதலிறைவா!
எங்கள் குலமுதல்வர் இணையில்லாக் குட்டையனார்
பொங்குமருள் நலம்வேண்டிப் பூந்தமிழால் தெண்டனிட்டோம்
சங்கமுயர் செந்தமிழைத் தந்தருள வேண்டுமய்யா!

முருகன் வணக்கம்

ஆருயிரே! மலையாண்டி! ஆறுமுக வேலவனே!
சீருயர அருளாடும் செல்வத்தை எமக்களித்துப்
பாருயரச் செய்தவராம் பாட்டய்யா அருள்வேண்டி
ஓருணர்வாய்த் தெண்டனிட்டோம் உவந்தருள வேண்டுமய்யா.

ஐயா! பெரியவரே! அருளாடும் பெருந்தவத்தை
உய்யுமொரு நெறியாக்கி உயர்ந்தோங்கச் செய்தவரே!
கையில் திருநீறாய்க் கண்ணில் வழிநீராய்
மெய்யில் அருளாகி மேல்வருவீர் இதுசமயம்

நீருயரும் வைகை நெடுங்கரையின் சோலையினால்
சீருயரும் கண்டனூர்ச் சிறப்புயறச் செய்தவரே!
பாருயரும் தைப்பூசப் பழநிமலை யாத்திரையில்
ஓருயிரின் துணையாக உடன்வருவீர் இதுசமயம்

மங்கலங்கள் பொங்கிவர மனைகாக்கும் வாழ்முதலே!
எங்கள் குலத்தாரே ஈடேற்ற வந்தவரே!
சங்குடனே சந்திரனில் சரித்திரங்கள் படைத்தவரே!
செங்கோல் பிரம்புடனே சேர்ந்திடுவீர் இதுசமயம்

வைகாவூர் நாட்டரசன் மருதிரண்டு பாண்டியரும்
மெய்காவல் எனவுணர்ந்து மிகப்பணிந்த பெரியவரே!
கைகாவல் திருநீற்றால் கந்தனருள் தந்தவரே!
பைகாவல் எனவழியில் படர்ந்திடுவீர் இதுசமயம்

சுந்தரேசர் மீனாட்சி தூயதிருச் சந்நிதியில்
சிந்தூரப் பூநாச்சி செல்லாயி முன்னிலையில் வந்தவரே!
குலமுதலே! பழநிமலை யாத்திரையார்
முந்துநடை பலித்திடவே முதல் நடப்பீர் இதுசமயம்

Koviloor Digital Library

பாதரக் குடியிலிருந்து பயிற்றுவிக்கும் குருபீடம்
மீதெழுந்த கட்டியினை மேலான திருநீற்றால்
ஆதரவாய் நீக்கி அருளாட்சி செய்தவரே!
பாதைவழித் துணையாகப் படர்ந்திடுவீர் இதுசமயம்

நோவுதந்த கட்டியினை நொடிப்பொழுதில் நீக்கியதால்
வேவுதந்த குருபீடம் பெருமைசெய்த அய்யாவே!
பாவுடனே பள்ளயங்கள் படைத்தும்மைப் போற்றுகிறோம்
காவடியின் தோகையிலே கலந்திடுவீர் இதுசமயம்

மடைதிறந்த வெள்ளம் போல் மண்டிவரும் மெய்யடியார்
நடைப்பயணக் கப்பலுக்கு நல்லதொரு சுக்காணை
அடையாளம் காட்ட அள்ளியள்ளி வழங்குகிற
இடைமடியின் திருநீறாய் எழுந்திடுவீர் இதுசமயம்

பண்டிருந்த மன்னர்களும் படைநடத்தும் தளபதியும்
அண்டிவந்து நலம்பெறவே அருளாட்சி செய்தவரே!
கண்டுமுதல் திருநீறாய்க் கந்தனுடன் கலந்தவரே!
வண்டிகளின் சக்கரமாய் வந்திடுவீர் இதுசமயம்

நெற்குப்பைச் சீமையிலே நேமமெனும் பிரிவினிலே
குப்பாப் பிச்சனருள் குமரப்ப பக்தருக்குச்
சுப்பையா கனவில்வந்து சொல்லிவைத்த அருளரசே!
எப்போதும் அழைத்தவுடன் எழுந்திடுவீர் இதுசமயம்

பீடுயர்ந்த பழநிமலைப் பெருமானின் திருவருளை
நாடுநகரமெல்லாம் நன்கடைந்து திகழ்ந்திடவே
ஊடுவந்து தூதுவரே! உய்யவந்த நாயகமே!
வீடுகளில் விளக்காக விளங்கிடுவீர் இதுசமயம்

திருஞான சம்பந்தர் திருநீற்றின் பெருமையினை
ஒருநாவால் உரைத்தனை உலகறியச் செய்தவரே!
குருவாகிப் பழநிமலைக் கொடியேற்றி வைத்தவரே!
அருளாடும் வேளையிலே அருகிருப்பீர் இதுசமயம்

வீட்டய்யா ஆனவரே! விளக்கில் திகழ்பவரே!
பாட்டய்யா ஆனவரே! பரம்பரையைக் காப்பவரே!
மேட்டய்யா திருவருளை மேதினிக்கே வழங்கியதால்
நாட்டய்யா ஆனவரே! நலம்கொடுப்பீர் இதுசமயம்

Koviloor Digital Library

ஆறுகால் சவுக்கையையும் அன்னதான மடத்தினையும்
நூறுகால் மண்டபமாய் நொடிப்பொழுதில் உருவாக்கி
ஆறுதலும் தேறுதலும் அடியவர்கள் கொண்டுயரப்
பாலருகில் பிறந்தவரே! வரம் கொடுப்பீர் இதுசமயம்

மனத்திருக்கும் குறைகளினை மலைவிளக்காய்க் கண்டுணர்ந்து
கனத்திருக்கும் சுமையான கவலைகளை கீழிறக்கி
வனத்திருக்கும் மயிலேறி வடிவேலன் அருள்கொடுப்பீர்
நினைத்திருக்கும் வேளையெல்லாம் நெருங்கிடுவீர் இதுசமயம்

சோதனைகள் செய்தாலும் சூழ்ந்துநின்றே எதிர்த்தாலும்
வேதனைகள் செய்தாலும் விளையாடிப் பார்த்தாலும்
சாதனைகள் அத்தனையும் சாம்பலிலே வைத்தவரே!
போதனைகள் செய்திடவே புறப்படுவீர் இதுசமயம்

ஆதிமுதல் ஆனவரே! அருளாடும் வேளையிலே
சோதிவடி வானவரே! சுடர்வேலாய் ஜொலித்தவரே!
சாதிசனம் எதிர்த்தாலும் சகோதரமே பகைத்தாலும்
நீதியினை நிலைநாட்ட நெருங்கிடுவீர் இதுசமயம்

பூங்காவின் பின்புறத்தில் புண்ணியத்தின் சந்நிதியில்
தூங்காமல் தூங்குகிற தூயதிரு மண்டபத்தில்
ஓங்கியுயர் கோபுரத்தில் ஊற்றுகிற மஞ்சனத்தில்
நீங்காமல் தெய்வமென நின்றுடுவீர் இதுசமயம்

அருளாடும் தந்தையையும் அரவணைக்கும் அன்னையையும்
ஒருசேரப் பறிகொடுத்தே உருகுகின்ற வேளையிலே
அருளாடும் பலத்தாலே அருகிருந்து காப்பாற்றி
உருவாக்கி வைத்தவரே! உடன்வருவீர் இதுசமயம்

பிள்ளைகள்யாம் ஆதலினால் பிழையேதும் செய்திருந்தால்
தள்ளிஒதுக்காமல் தாய்போல் பொறுத்திடுக!
புள்ளிமயில் வேலவனைப் போற்றுகிற கடமையினை
நல்லதிருப் பணியாக நடத்திடுவீர் இதுசமயம்

ஏற்றமுமில்லை தாழ்வுமில்லை இனமுமில்லை மதமுமில்லை
சாற்றுமொழிப் பேதமில்லை சரிசமமாய் அனைவருமே
ஏற்றிவிடும் ஏணியென ஏறிவரும் பழநிமலை
போற்றுமருள் தொடர்ந்திடவே புறப்படுவீர் இதுசமயம்

Koviloor Digital Library

குட்டையப்பா என்ற பெயர் கொண்டாலும் நிலமளக்கும்
நெட்டைப் புகழுடையீர் நிலையான அருளுடையீர்
பட்டப்பகல் போலப் பழநிமலை ஆண்டியருள்
கிட்டிடவே திருநீறாய்க் கிளம்பிடுவீர் இதுசமயம்

தெங்காக வாழ்ந்தவரே! செவ்வேளின் தூதுவரே!
பங்காளி உறவுடனே பாரனைத்தும் காத்திடவே
எங்கள் குலமுதலே! எம்பெருமான் சந்நிதியே!
சிங்காரப் பாட்டுடனே சேர்ந்திடுவீர் இதுசமயம்

மகாகவி முனைவர் அர. சிங்காரவடிவேலன்

இராசராசேசுவரி

அருட்கவி, கு.செ. இராமசாமி

சிந்தூரம், குங்குமம், செவ்வானம், அவ்வானம்
        திகழவரு சுதிரின் உதயம்
தேசுமிகு மாணிக்கம், திருஏறு கமலம்அச்
        செங்கமலம் அஞ்சு பவழம்
மந்தாரம், மழைநாளில் வரும் இந்த்ர கோபம், அவ்
        வண்டுரும் மலையில் நறவம்
மான்மதம், செங்குருதி போன்மலரும் மாதுளம்
        மாதுளம் சிதறு முத்தம்
செந்தீயின் வண்ணம் என வேசொல்லு(ம்) மேனியும்
        செப்பரிய அழகு வடிவும்
சிங்கா தனத்திலும் சிவனார் மனத்திலும்
        சீர்கொண் டிலங்கும் எனினும்
எந்தாய்நின் பேர்சொல்லும் ஏழையேன் அறிவிலும்
        என்றென்றும் திகழ அருள்வாய்!
இறைவிளனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
        இமயமலை வாழும் உமையே!

சீரார் பெருந்துறையில் சிவயோக நாயகி,
        சிவகாமி தில்லைமன்றில்
தென்குமரி பகவதி, திருவானைக் காவினில்
        திகழும் அகி லாண்டேச்வரி

Koviloor Digital Library

காரார் மதிற்கச்சி காமாட்சி, அங்கயற்
கண்ணி செந் தமிழ்மது ரையில்.
கங்கைவள நாடுடைய நங்கை விசாலாட்சி
காளிவங் காள மண்ணில்
தாரார் சிவன்தோளும் தமிழும் விழைபவள்
சமயபுரம் அதனில் மாரி,
தட்டாமல் கடவூரில் பட்டருக் கருள் செய்த
தையல் அபிராம வல்லி
ஏரார் மழைக்கண்ணி எண்ணிரிய நின்கோலம்
யாவும்எமை ஆள வலவோ?
இறைவியெனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

மாரியாய், மேரியாய் மகமது நபிக்கருள
வந்தஒரு மாசக்தியாய்,
மனவாக் கிறந்ததிரு வருளாய் மதங்கள் தொறும்
வாழ்கின்ற தெய்வம் நீயே!
ஓரிடம் ஒருகுணம் ஒருநிலை ஓர் உருவம்
ஒரு பெயர் ஒருவி கற்பம்
ஒன்றுமில் லாதபடி ஒவ்வொன்றும் தானாகி
உணர்வரிய பிரமம் நீயே!
ஆரியம் திராவிடம் ஆங்கிலம் சீனமென
அமைகின்ற மொழிகள் நீயே!
ஆமென்றும் இல்லையென அறுதியுடன் வாதித்தும்
அடைவரிய எல்லை நீயே!
யாரென்ன சொன்னாலும் யான் உன்னை ஒருநாளும்
ஐயுற்ற தில்லை தாயே!
இறைவி எனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

Koviloor Digital Library

துயிலெழும் வேளையில், சுவைநீர் அருந்துகையில்
துறைநீர் படிந்தெழுகையில்
தொழுகையில், பலபணியும் புரிகையில் இன்பமொடு
துன்பங்கள் எதிர்வ ருகையில்
வயிறார உண்ணுகையில், மாதரார் தோட்புறம்
மனமுருகி உயிர்தோய் கையில்
மக்கள்மெய் தீண்டுகையில், மாறாத காதலொடு
வண்டமிழ்ச் சுவைஆய் கையில்
அயலெவரும் அறியாமல் அன்னையுனை வழிபடும்
ஆசைமகன் நானில் லையா?
ஆசைமகன் தருகின்ற வாசமலர் மாலைகள்
அத்தனையும் தேனில் லையா?
இயலும் வரை பாடியும் எடுத்தளிக் காமல் நீ
இருப்பதொரு பழியில் லையா?
இறைவி எனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

தேவாதி தேவநின் தெய்வமாக் கருணையால்
தீராத நோய்கள் தீரும்
செல்வமும் செல்வாக்கும் செருமுனையில் வெற்றியும்
சீர்நிலை பேரும் சேரும்
பூவுலகில் நிலையான புகழ்பெருகும் அறிவில் ஒரு
புதிய ஒளி தான் பிறக்கும்
பூண் ஆள் இடம் துணை புத்திரர் பசுக்கள் எனும்
பொலிவுவரும் உயிர்த ழைக்கும்
பாவங்கள் ஏழ்மைகள் பழவினைகள் எனும்இவைகள்
பனிபோல் அகன்று நீங்கும்
பத்தியொடு சொல்வார்க்குச் சித்திகள் கைகூடும்
பாரின்மிசை அமைதி ஓங்கும்
யாவும் கடந்தபே ரின்பநிலை கிட்டும்என
இசைபாடி வாழ்த்து கின்றோம்!
இறைவிஎனை ஆண்டருளும் இராசரா சேச்வரி
இமயமலை வாழும் உமையே!

Koviloor Digital Library

பழநியம் பதியின் பெருமானே!

- முனைவர் அரசி

திருமுடி ஆறும் இருமட மாதர்
திருவடி சேரும் வடிவேலா!
திருப்பரம் குன்றில் தேவர்கோன் மகளைத்
திருமணம் கொண்ட மணவாளா!
விருப்புடன் பாடும் திருப்புகழ் கேட்டு
விரைவினில் ஓடி வருவாயே!
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழநியம் பதியின் பெருமானே!

சீரலை வாயாம் செந்தூர்க் கரையில்
சூரனைக் கொன்ற வடிவேலா!
நீரலை போல நெஞ்சலை மோத
நேர்வழி கூறும் குருநாதா!
தாரலை மார்பா! சண்முக நாதா!
தமிழலை மீதில் தவழ்பாலா!
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழநியம் பதியின் பெருமானே!
பழநியம் பதியில் பண்டார மாகிப்
பக்தரைக் காக்கும் வடிவேலா!
இளகிய நெஞ்சே அழகிய மயிலாய்
எழுந்தருள் செய்யும் குணசீலா!
கழனியில் நெல்லாய்க் கடலினிற் கலமாய்க்
கடுவினை மாய்க்க வருவாயே
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழநியம் பதியின் பெருமானே

ஏரகப் பதியில் தாரகப் பொருளை
ஈசனுக் குரைத்த குருநாதா!
ஈரகம் கொண்டும் சீரக மணம்போல்
இல்லறம் கண்ட பெருமானே!
பாரகம் போற்றும் பைந்தமிழ் மணியே!
பழவினை மாற்றும் முருகேசா!
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழநியம் பதியின் பெருமானே!

Koviloor Digital Library

தணிகையம் பதியில் வனிதையர் உடனே
தமிழகம் காக்கும் வடிவேலா!
மணிகளின் மணியே! மலைமகள் மகனே!
மாலவன் போற்றும் மருகோனே!
அணியணி ஆகி அடியவர் பாடும்
அருந்தமிழ் கேட்க வருவாயே
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழநியம் பதியின் பெருமானே!

கிழமுதிர் மந்தி கிளையுடன் திரியும்
பழமுதிர் சோலை வடிவேலா!
உளமுதிர் அன்பே உய்வகை என்றே
உணர்வகை காட்டும் முருகேசா
பழவினை மாற்றப் பலவினை நீக்கப்
பக்தரை நோக்கி வருவாயே
பனிமுடி திகழும் பைந்தமிழ் தவழும்
பழநியம் பதியின் பெருமானே!

தேவி காளிகாம்பாள் திருச்சதகம்

காப்பு

அருள்தரும் ஐங்கரா! ஆனைமுக விநாயகா!
அரனவன் மூத்த மைந்தா!
அம்மையை அப்பனை அகிலமாய்ச் சுற்றியே
அருங்கனி பெற்ற செல்வா!
பெருமைகள் கொண்டவா! பேறுகள் நல்குவாய்
பெருந்துணை நீயல்லவா?
பேரருள் நல்கிடும் தாரணி மார்பனே!
பேதையைக் காக்க வாராய்
திருவளரும் சென்னையில் பெருமைமிகு மண்ணடி
திருக்கோயில் கொண்ட தாயாம்
தேவிகா ளிகாம்பாள் திருவருள் பெருமையைத்
திக்திக்கும் பாக்களாலே
விருத்தமாய்க் கொட்டியே பொருத்தமாய் இருந்துநீ
வெற்றிதரத் தமிழாகுவாய்
வேலேந்தும் தம்பியுடன் சூலேந்தும் தாய்புகழ்
விரைந்தெழுதக் காப்பாகுவாய்!

Koviloor Digital Library

கண்களால் அருள்கிறாள் கரங்களால் தருகிறாள்
காரியம் செல்ல வைப்பாள்
கனவிலும் வருகிறாள் காட்சியும் தருகிறாள்
கவலைகள் ஓட வைப்பாள்
முன்வந்து தொழுபவர் முத்தான வாழ்வுபெற
தன்னருள் தந்து காப்பாள்
முதலாகி அனைவர்க்கும் முயற்சியின் பயனாகி
முடிவுமே அவளா கிறாள்
எந்நேரம் அவளையே இதயத்தில் நினைப்போர்க்கு
எழுந்துடனே காட்சி தருவாள்
எங்கும் நிறைந்தவன், மங்கலம் ஆனவள்
ஏகாந்த ஜோதி மாதா
மண்ணடி காக்கின்ற மாபெரும் தெய்வமே
மாசக்தி காளிகாம்பாள்
மலரடி வணங்குவோம்; மலர்தூவிப் போற்றுவோம்
மகிழ்ச்சியை நல்குவாயே!

எலுமிச்சைக் கனிமாலை கழுத்திலே அணிந்து நீ
எப்போதும் காட்சி தருவாய்
ஏற்றும்நெய் விளக்கிலே இறைவிநீ மகிழ்ந்துமே
எதிர்காலம் வளமாக்குவாய்
கொலுவினில் தோன்றுவாய்; கொண்டாடும் மக்களின்
குறையாவும் தீர்த்து வைப்பாய்
கோடானு கோடியாய் கூடியே மக்களும்
கோதைஉனைத் தொழுது நிற்பார்
வலுவான மனத்துடன் வற்றாத செல்வமும்
வரமாகத் தந்தருளுவாய்
வஞ்சியே உன்னையாம் கெஞ்சியும் கொஞ்சியும்
வாயாரப் போற்றுகின்றோம்.
மண்ணடி காக்கின்ற மாபெரும் தெய்வமே
மாசக்தி காளிகாம்பாள்
மலரடி வணக்குவோம்; மலர்தூவிப் போற்றுவோம்
மகிழ்ச்சியை நல்குவாயே!

Koviloor Digital Library

மராட்டிய மன்னாம் வீர சிவாஜியும்
மகிழ்வுடன் மண்டியிட்டான்
மக்களின் குறைதீர்க்கும் மன்னவன் குறைதீர்த்த
மாசக்தி காளிநீயே!
வாராத நாத்திகனும் நேராக வந்தும்மை
வணங்கவே வைத்த தாயே!
வாடாத மலர்மாலை சூடாத நாளில்லை
வஞ்சியே உந்தன் மேனி
தீராத நோய்களும் சூலா யுதம்கொண்டு
தீர்த்துசுகம் காண வைப்பாய்
திரும்பும் திசையெலாம் தேவியுன் அருள்வெள்ளம்
திருப்புகழ் கூட்டுதம்மா
மண்ணடி காக்கின்ற மாபெரும் தெய்வமே
மாசக்தி காளிகாம்பாள்
மலரடி வணங்குவோம்; மலர்தூவிப் போற்றுவோம்
மகிழ்ச்சி நல்குவாயே!

தொழில் செய்வோர் முதலாகித் தொடர்ந்து வரும் வளர்ச்சியை
தோகைநீ காக்கவேண்டும்
தொல்லைகள் மாற்றியே வல்லநீ எமக்கருளி
தூணாகத் துணையும் வேண்டும்.
அழியாத உன்புகழ் அனுதினம் எம்வாயால்
அம்மாவைப் பாட வேண்டும்
அன்போடு பணிசெய்வோர் அல்லல்கள் காணாமல்
அவர்பணி உயரவேண்டும்
களிப்புடன் அனைவரும் இன்பமுடன் வாழவே
கண்களால் அருள்வேண்டும்
காளியே! தேவியே! கலியுக தெய்வமே!
கருணை மழை பொழியவேண்டும்
மண்ணடி காக்கின்ற மாபெரும் தெய்வமே
மாசக்தி காளிகாம்பாள்
மலரடி வணங்குவோம். மலர்தூவிப் போற்றுவோம்
மகிழ்ச்சியை நல்குவாயே!

கவிஞர் அரசி முத்துக்குமார், கண்டனூர்

Koviloor Digital Library

வாழ்த்து

ஆறிறு தடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெ ய்தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறியமஞ்ஞை வாழ்க! யானைதன் அணங்கு வாழ்க! மாறிலா
வள்ளி வாழ்க! வாழ்கசீர் அடியார் எல்லாம்.


எல்லாவளத் தோடும்! என்றும் நலம்பெறவே!
வல்லாய்திருமகளே வந்திடுக! சொல்லாலே பாடிப்பரவுகிறோம்
பால்போல் எம்மனையில் கூடிவருவலாய் குழைந்து!

எண்ணருங்கலைகள் வாழி
இறைவன் நான் என்னல்வாழி
உண்ணிறை சக்திபீடம்
ஓமெனும் ஒலியில்வாழி
கண்ணிறை மணியே ஞான
கருமறைப் பொருளே வாழி
எண்டிசை உலகம் எல்லாம்
விண்டுனை வாழி வாழி!

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்!

- சுபம் -

Koviloor Digital Library



Koviloor Digital Library

வாழ்க வளமுடன்! உ சிவமயம் வாழ்க வையகம்!!

வாணிபமே கோவில்!

வாடிக்கையாளர்களே எங்கள் தெய்வம்!!

இனிக்க! மணக்க!! சுவைக்க!!!



அழகு செட்டிநாடு ஸ்நாக்ஸ்










எண்.6A, சுப்பிரமணியபுரம் 7வது வீதி வடக்கு

ICICI வங்கி காலேஜ் ரோடு கிளை அருகில், காரைக்குடி - 3.

Web : www.chettinadufood.com

Customer Care No. : 97504 06777

WhatsApp : 98945 92516

Koviloor Digital Library

இறைபணியில் தங்களது சேவை
என்றென்றும் தொடர்ந்திட நல்வாழ்த்துக்கள்!



9094133335

KASTURI PROCESS

MAHALAKSHMI BINDINGS

We make great impressions

- ✓ Invitation Card
- ✓ Magazine Book
- ✓ Product Box
- ✓ Calendar
- ✓ Diary
- ✓ Studio Cover
- ✓ Job Cover
- ✓ Polypack



kasturiprocess@gmail.com
"Chellaiah Muththammal Bavanam"
348, Jawaharlal Nehru Road,
Near Pathrakaliamman Temple,
SIVAKASI - 626 123.